**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் - 2021**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுக்கப்பட்ட அபிப்பிராயம்**

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் (''நிதியம்'') 2021திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர்31ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கு இணங்கவும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதி அறிக்கைகள் குறித்து நான் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.எனது அறிக்கையின் மறுக்கப்பட்ட அபிப்பிராயத்தின் பிரிவில் விவாதிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்த நிதி அறிக்கைகள் மீதான கணக்காய்வுக் கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற முடியவில்லை.

**1.2 மறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகிறது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) பின்வரும் காரணங்களால் பலவீனமான கட்டுப்பாட்டு சூழல் காணப்பட்டது.<br><br>(i.) நான்கு (04) முக்கிய முகாமைத்துவப் பதவிகளில் இருந்து மூன்று (03) பதவிகள் வெற்றிடமாக உள்ளன. தலைமைச் செயல் அதிகாரி மற்றும் உதவிப் பொது முகாமையாளர் - நிதி ஆகிய வெற்றிடங்கள் அவர்களின் நிரந்தர பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இயங்கு செயலமர் பணிபுரி நடவடிக்கை அடிப்படையில் நிரப்பப்பட்டன. உதவி பொது முகாமையாளர் - செயல்பாடு, பதவியானது பணிநிலை விபரம் அங்கிகரிக்கப்பட்ட திகதியான 01 நவம்பர் 2016 முதல் வெற்றிடமாகவே உள்ளது. மேலும் ஏழு (07) முகாமைத்துவப் பதவிகளில் ஐந்து | நிறுவன இலக்குகளை அடைவதற்கு நிறுவனத்தின் சுமூகமான செயல்பாட்டிற்காக அந்த வெற்றிடங்களை நிரப்புவது அவசியமானதாக இருந்தாலும், நிறுவனம் அனைத்து வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்பு செயல்முறைகளை செய்துள்ளது. மேலும். 2019 முதல் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் அரசாங்கம் நிறுத்தியுள்ளது.<br>எவ்வாறாயினும்,இந்த சிக்கலின் தீவிரம் காரணமாக,சபையின் ஒப்புதலுடன் வெற்றிடமாக உள்ள பணியிடங்களை ஆட்சேர்ப்பு செய்ய பொது முயற்சிகள் திணைக்களத்தின் சிறப்பு அனுமதியை நிதியம் பெற்றுள்ளது. அதன்படி, ஆட்சேர்ப்பு செயல்முறை | முக்கிய முகாமைத்துவ பதவிகளை நிரப்பவும் கட்டுப்பாட்டு சூழலை வலுப்படுத்தவும் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (05) பதவிகள் வெற்றிடமாக இருந்தன மற்றும் மூன்று (03) முகாமைத்துவப் பதவிகள் அவர்களின் நிரந்தர பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இயங்கு செயலமர் பணிபுரி நடவடிக்கை அடிப்படையில் நிரப்பப்பட்டன. எனவே, உள்கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்துதல், செயல்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கான வாய்ப்பு மிகக் குறைவு. | ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது மற்றும் 2023 முதல் காலாண்டில் பணி வெற்றிடங்களை நிரப்ப எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ii.) அந்த செயற்பாடுகளை மேற்க்கொள்ளுவதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான திறன்களைக் கொண்ட பொறுப்புள்ள பிரிவுகள் மற்றும் அதிகாரிகள் இல்லாத காரணத்தால் மதிப்பீட்டு செயற்பாடு, இடர் முகாமைத்துவ செயற்பாடுமற்றும் முதலீட்டுச் செயற்பாடு ஆகிய செயற்பாடுகள் பயனுறுதி மிக்க வகையில் மேற்க்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எனவே, இடர்களை சரியான நேரத்தில் கண்டறிதல் மற்றும் அந்த அபாயங்களை குறைப்பதற்கான உத்திகளைச் செயல்படுத்துதல், உண்மையான மதிப்பீடுகளைச் செய்வதற்கான துல்லியமான தகவல்களை வழங்குதல் ஆகியவை பயனுள்ளதாக இருக்காது. | மதிப்பீட்டு செயற்பாடு, இடர் முகாமைத்துவ செயற்பாடு மற்றும் முதலீட்டு செயல்பாடு ஆகியவை அர்ப்பணிப்புள்ள பணியாளர்களால் நிரப்பப்படவில்லை என்றாலும், அந்த செயல்பாடுகள் வெற்றிகரமாகவும் திறம்படவும் செய்யப்படவில்லை அல்லது செயல்படவில்லை என்று அர்த்தமல்ல. | அந்த செயல்பாடுகளை திறம்பட இயக்குவதற்காக தேவையான வளங்களுடன் அந்த முக்கிய பிரிவுகளை நிறுவுவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (iii.) பெப்ரவரி 2020 முதல் அக்டோபர் 2021 வரை (20 மாதங்கள்) உள்ளகக் கணக்காய்வு செயல்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு குழு நடத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, வழக்கமான அடிப்படையில் உள் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பாய்வு செய்து பலப்படுத்தவும், நிதி அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கான நிதி அறிக்கைகள் தயாரிப்பு செயல்முறை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரிவின் தலைவர் பதவி வெறுமையாக இருப்பதால் உள்ளக கணக்காய்வு மற்றும் கணக்காய்வு குழு செயல்படவில்லை என்பதை NITF ஒப்புக்கொள்கிறது. 2020 ஆம் ஆண்டில் நிலவிய கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக கணக்காய்வுக் குழுவின் பதவியை நிரப்புவதும் அதன் செயல்பாடும் தாமதமானது. | கணக்காய்வுக் குழு மற்றும் உள்ளகக் கணக்காய்வின் திறமையான செயல்பாட்டை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (iv.) அக்ரஹாரா இன்சூரன்ஸ் திட்டத்தில் ஊழியர் ஒருவர் செய்த மோசடி தற்செயலாக அக்டோபர் 2022 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மோசடி | இந்த மோசடி தொடர்பான முதன்மை விசாரணை முடிந்து, இயக்குநர் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். மோசடியை | மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் மோசடி அபாயத்தைக் குறைப்பதற்கும் உள்ளகக் |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்டுள்ளது மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கையின் படி கண்டுபிடிக்கப்பட்ட நிதி இழப்பு ரூபா.5,136,000ஆகும். முறையான மேற்பார்வை மற்றும் கண்காணிப்புடனான உறுதியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தல் என்பவை பற்றாக்குறையான காரணத்தால் இது நடந்தது. மேலும் நிதிக்கான கட்டுப்பாட்டுச் சூழலின் உறுதியான முறைமை இல்லை என்பதை இது காட்டுகிறது. மேலும், இது தொடர்பான தற்போதைய நிலை கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் ஏற்றுக்கொண்டார் மற்றும் நிதி இழப்பு ரூபா.5,136,000 நீதவான் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது, இது முறையான நடைமுறைகளுக்குப் பிறகு நிதியத்தால் மீட்கப்படும். | கட்டுப்பாட்டின் உறுதியான அமைப்பை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (b.) | உரிமைக்கோரல் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது முதல் உரிமைக்கோரல்களைத் தீர்ப்பது வரையான அக்ரஹாரா உரிமைக்கோரல்களை கையாள்வதற்கான ஒருங்கிணைந்த முறைமை நிதியத்திற்கு கிடைப்பனவு அற்றதாக இருக்கிறது. எனவே, உரிமைகோரல் விண்ணப்பங்கள் பொறுப்பற்ற முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதால், உரிமைகோரல் தகவல் இழப்பு மற்றும் உரிமைகோரல் செயலாக்கத்தில் தேவையற்ற தாமதம் ஆகியவை அவதானிக்கப்பட்டிருந்தன. | எவ்வாறாயினும்,உரிமைகோரல் பொறுப்பை ஏற்றுக்கொள்வது மற்றும் அடையாளம் காண்பது தவிர, அக்ரஹார உரிமைகோரல் பிரிவு ஒரு ஒருங்கிணைந்த அமைப்புடன் செயல்படுகிறது, இது உரிமைகோரல் செயல்முறையின் முதல் கட்டமாக செய்யப்படுகிறது. உரிமைகோரல் செயலாக்க அமைப்பு மாற்றங்களின் இந்த ஆரம்ப நிலைகளானது 2022-2025 பெருநிறுவன திட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது. | அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்காக உறுதியான உள் கட்டுப்பாட்டு அமைப்பை அறிமுகப்படுத்த முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (c.) | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியம் (SRCC & Tr Fund)ஆகியவற்றின் கொடுக்கல் வாங்கல்கள் மூல ஆவணங்களைப் பயன்படுத்தி எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மற்றும் ஆண்டின் இறுதியில் எக்செல் கோப்புக்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் கையேட்டு பேரேட்டிற்கு புதுப்பிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் SAGE கணக்கியல் முறைமையில் இந்த வசதி வழங்கப்பட்டிருந்தாலும், வேலைநிறுத்தம் கலவரம் சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத்தின் (SRCC & Tr Fund)நிதி அறிக்கை செயல்முறைக்கு நிகழ்நேர அடிப்படையில் அந்த வசதி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | SRCC தவணை விலைப்பட்டியல் செய்யும் முறை SAGE கணக்கியல் முறையுடன் ஒத்துப்போகவில்லை, இதனால் SAGE இல் GLஐ ஒரு முறை புதுப்பிப்பதில் சிரமம் ஏற்பட்டது.எவ்வாறாயினும், 2023 இல் SRCC க்கு வழிகாட்டுதல்களை வழங்கிய பிறகு,NITF ஆனது ஒவ்வொரு மாதமும் முடிந்த 10 நாட்களுக்குள் பொது காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பிரீமியம் விவரங்களை சேகரிக்கிறது. காப்புறுதிக் கம்பனிகளுக்கு NITF வழிகாட்டுதல்களை வழங்கியதால், இந்த கூடுதல் கட்டுப்பாடு நிறுத்தப்படும். மேலும், இந்த இணையான வேலை GLமீதிகளை குறுக்கு | முகாமைத்துவம் நிதித் தகவல் அமைப்புகளை சரியான நேரத்தில் புதுப்பிப்பதை உறுதிசெய்து தகவல் ஒருமைப்பாட்டை உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனவே, அமைப்புகளிற்கு இடையே ஒரே தரவு செயலாக்கத்தின் போது நகல் வேலைகள் மற்றும் தரவு நகல்களின் அதிக ஆபத்து மற்றும் வழுக்கள் ஏற்படலாம். மேலும், ஒருங்கிணைப்புகளின் போது தரவு கையாளுதலில் அதிக சாத்தியக்கூறு இருப்பதாக தோன்றுகிறது. | சோதனை செய்வதையும், கையேடு அமைப்பில் ஏதேனும் பிழைகள் இருந்தால் கண்டறிவதையும் உறுதி செய்கிறது.இந்த நகல் அறிக்கையிடலின் அபாயத்தைக் குறைக்கும் வழியாகும், உண்மையில் இது ஒரு வகையான கட்டுப்பாட்டாகும், ஏனெனில் இது GL மற்றும் புள்ளிவிவரங்களின் துல்லியத்தை உறுதிப்படுத்துகிறது. | |
| (d.) | அக்ரஹாரா சாதாரண, வெள்ளி மற்றும் தங்கத் திட்டங்களுக்கான நிதிநிலை அறிக்கைகளில், அக்ரஹாரா காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பு ஒரு வருமானப் உருப்படியாக இனங்காணப்பட்டிருந்தது. முறையான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளம் இல்லாததால் ஒவ்வொரு அக்ரஹாரா காப்புறுதித் திட்டங்களிற்கும் அளிக்கப்பட்ட பங்களிப்புகளிற்கான தகவல்களைப் பெறுவதும் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தாலும் ஒவ்வொரு காப்புறுதி பத்திர உரிமையாளராலும் நிதியத்திற்கு வழங்கிய மாதாந்த பங்களிப்புக்களின் விரிவான பதிவைப் பெறுவதும் கடினமாகும். | விரிவான புதுப்பிக்கப்பட்ட தரவுத் தளம் கிடைக்காததன் அடிப்படையில் அவதானிப்புடன் உடன்பட்டது.இருப்பினும், தற்போதுள்ள அமைப்பில், சில நிறுவனங்களைத் தவிர, அக்ரஹார சாதாரண, வெள்ளி மற்றும் தங்க தவணைப்பணங்கள் தனித்தனியாக வழங்கப்பட முடியும்.எவ்வாறாயினும், நிதி அமைச்சின் ஆதரவுடன் ஒரு புதிய விரிவான தகவல் அமைப்பு செயல்ப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் டிசம்பர் 2022 முதல் செயல்பாட்டில் உள்ளது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவை 2023 முதல் கிடைப்பனவாக இருக்கும். | அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கான தவணை வசூல் மற்றும் உரிமைக்கோரல் செயலாக்கத்திற்கான பயனுறுதி வாய்ந்த அமைப்பை உறுதி செய்ய முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (e.) | மீள்காப்பறுதி நிலுவை உரிமைக்கோரல்களின் நிதித் தகவல் ரூபா.2,623,829,593 மற்றும் செலுத்தப்பட்ட மீள்காப்பறுதி உரிமைக்கோரல்கள் எக்செல் தாள்களில் கைமுறையாகப் பராமரிக்கப்பட்டிருந்தன. எனவே, மீள்காப்பறுதி பிரிவில் கொடுக்கல் வாங்கல்களை கையாள்வதற்கும் பதிவுகளை வைத்திருப்பதற்கும் முறையான அமைப்பு இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br>எனவே, மீள்காப்பறுதிப் பிரிவில் நிதித் தகவல் அறிக்கையிடலில் உள்ள பலவீனங்கள் காரணமாக தரவு ஒருமைப்பாட்டின் அதிக ஆபத்து உள்ளது. மேலும், மீள்காப்பறுதி உரிமைகோரல்களை சேகரிப்பதற்கான சரியான நேரத்திலான நடவடிக்கைகள் மற்றும் அந்தத் தகவலின் துல்லியம் கேள்விக்குரியது. | எந்த அமைப்பும் இல்லாவிட்டாலும், தரவுகளின் துல்லியம் மற்றும் முழுமையை உறுதிப்படுத்த பொதுவான கட்டுப்பாடுகள் உள்ளன. Sage ACCPAC இன் கொடுக்க வேண்டிய கணக்குகள் தொகுதி தற்போது உரிமைக்கோரல் செயல்முறைகளுக்காக செயல்பாட்டில் உள்ளது.மேலும், பெருநிறுவன திட்டம் 2022-2025 இன் படி RI பிரிவின் உரிமைகோரல் கையாளுதலுக்கான அமைப்பை தற்போது உருவாக்கும் பணியில் நிதியம் ஈடுபட்டுள்ளது. | முகாமைத்துவமானது பயனுறுதிவாய்ந்த அறிக்கையிடல் முறைமை இருப்பதை உறுதி செய்ய வேண்டும். |
| (f.) | ஒரு ஊழியர் கடன் பதிவேடு ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நிறுவனத்தால் | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | ஊழியர்களின் கடன் பதிவேட்டை கைமுறையாக அல்லது |

| | | |
|---|---|---|
| பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக, ஒரு ஊழியர் கடன் பதிவேடு எக்செல் கோப்பு வடிவமாக தயாரிக்கப்பட்டிருந்தது, இது அங்கீகரிக்கப்படாத மாற்றங்களின் சாத்தியக்கூறுகள்,வரலாற்றில் உள்ள தகவல்களின் நீக்கம் மற்றும் பதிப்பித்தல் போன்ற பதிவு செய்யப்பட்ட சம்பவங்கள் மற்றும் தகவலின் வரலாற்றின் துல்லியத்தை சரிபார்க்க இயலாமை போன்ற காரணங்களால் குறைந்த அளவிலான தரவு ஒருமைப்பாட்டிலிருந்து ஏற்றுக்கொள்ளவும் நம்பவும் முடியாது உள்ளது. நிதி அறிக்கைகளின் படி 31 டிசம்பர் 2021 இல் ஊழியர்களின் மொத்தக் கடன்கள் ரூபா. 47,326,145 ஆகும். | | மின்னணு முறையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பராமரிக்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (g.) 16 நவம்பர் 2021 திகதியிட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை எண். 01/2021 ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டுக் கையேட்டின் (SOEs) வழிகாட்டுதல்கள் 2.3 இன் படி, அனைத்து SOE களும் அவற்றின் சொந்த அமைப்புகள், செயல்முறைகள் மற்றும் நெறிமுறைகளை அனைத்து முக்கிய செயல்பாடுகளையும் உள்ளடக்கிய கையேடுகளில் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும், அவை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன. இருப்பினும், அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் அமைப்புக் கொள்கை நிதியத்திற்கு கிடைப்பனவாக இருக்கவில்லை. எனவே,ITபாதுகாப்புக் கொள்கை, பதிவுகள் முகாமைத்துவக் கொள்கை, வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவம் மற்றும் பேரிடர் மீட்புத் திட்டம், மீறல் பதில் திட்டம் மற்றும் தனியுரிமைக் கொள்கை ஆகியவை நிதியத்திற்கு கிடைப்பனவாக இருக்கவில்லை. எனவே, இது செல்லுபடியாகும் தன்மை, முழுமை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு மற்றும் தரவு மற்றும் செயலாக்கப்பட்ட தகவல்களின் கிடைப்பனவுத் தன்மையை பாதிக்கும். | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் அமைப்புக் கொள்கையைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுக்க வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட தரநியம குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) **SLFRS 07 – நிதிக் கருவிகள்: வெளிப்படுத்தல்கள்**<br><br>(i.) நியமத்தின் பந்தி 33(a) இன் படி, இடருக்கான வெளிப்பாடுகள் மற்றும் மீள்காப்புறுதி பெறவேண்டியவைகள், மோட்டார் பிரீமியம் பெறவேண்டியவைகள் மற்றும் மோட்டார் அல்லாத பெறவேண்டியவைகள் தொடர்பாக அவை எவ்வாறு எழுகின்றன என்பது குறித்து நிறுவனம் தேவையான வெளிப்படுத்தல்களைச் செய்திருக்கவில்லை.<br>(ii.) நியமத்தின் பந்தி 33(b) இன் படி, நிறுவனம் இடரினை நிர்வகிப்பதற்கான அதன் நோக்கங்கள், கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் மீள்காப்புறுதி பெறவேண்டியவைகள், மோட்டார் பிரீமியம் பெறவேண்டியவைகள் மற்றும் மோட்டார் அல்லாத பெறவேண்டியவைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய இடரினை அளவிடப் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்து போதுமான வெளிப்பாடுகளை வழங்கியிருக்கவில்லை. | NITF அவதானிப்புடன் உடன்படுகிறது. | முகாமைத்துவம் தரநிலையின்படி தேவையான வெளிப்படுத்தல்களை செய்ய வேண்டும். |
| (b.) **LKAS 8 –கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள்**<br>நியமத்தின் 42 வது பந்தியின்படி, ஒரு நிறுவனம் அதன் கண்டுபிடிப்புக்குப் பிறகு வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் முதல் தொகுப்பில் முந்தைய காலப் பொருண்மையான பிழைகளை பின்னோக்கிச் சரி செய்யும்.தேசிய இயற்கைப் பேரிடர் காப்புறுதித் திட்டத்தின் (NNDIS) 26 மே 2018 முதல் 31யூலை 2018 வரையிலான காலப்பகுதி சீராக்கத் தவணைரூபா. 123,387,679 மற்றும் 15 மார்ச் 2018 முதல் 15 செப்டம்பர் 2019 வரையிலான காலப்பகுதிக்கான | நிதி அறிக்கைகளில் சரிசெய்ய கணக்கீட்டு வழு இல்லை. | முகாமைத்துவமானது, நிதி அறிக்கைகளில் உள்ள முந்தைய காலப் பிழைகளை, தரநிலையின் விதிகளுக்கு இணங்க, பின்னோக்கிப் பார்க்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதியத்தில் காப்புறுதி செய்யப்பட்ட இடருக்கான (Retrocession) மீள் காப்புறுதி சீராக்க தவணை ரூபா.466,292,684 ஆகிய தொகைகளானது மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டுக்கு இனங்காணப்பட்டிருந்தது.எனவே, நியமத்தின் விதிகளின்படி இந்த பிழை சரி செய்யப்பட்டிருக்கவில்லை.இதன் விளைவாக, ஆண்டுக்கான இலாபம் ரூபா.589,680,363 ஆல் குறைத்துக்கூறப்பட்டிருந்தது. | | |
| (a.) **LKAS 12 – வருமான வரி**<br>ஒத்திவைக்கப்பட்ட வரியை இனங்காண்பது மற்றும் அளவிடுவதற்கான கணக்கீட்டுக் கொள்கை நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதியமானது ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து ரூபா.4,081,840 தொகையினை 31 டிசம்பர் 2021 இல் இனங்கண்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். ஒத்திவைக்கப்பட்ட வரி கணக்கீடு செய்யப்படும் மற்றும் எதிர்கால அறிக்கையில் வெளிப்படுத்தப்படும். | முகாமைத்துவமானது ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்புக்கான கணக்கீட்டிற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**1.5.3கணக்கீட்டு கொள்கைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (a.) SLFRS 4 இன் பந்தி 36 மற்றும் 37(a) இன் படி - காப்புறுதி ஒப்பந்தங்கள்,காப்புறுதி ஒப்பந்தங்களில் இருந்து எழும் அதன் நிதி அறிக்கைகளில் உள்ள தொகைகளை அடையாளம் கண்டு விளக்கும் தகவலை காப்புறுதியாளர் வெளியிடுவார். எவ்வாறாயினும், மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான மீள்காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணை வருமானத்தை இனங்காண்பது மற்றும் அளவிடுவதற்கான கணக்கீட்டுக் கொள்கையை நிறுவனம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. மீள்காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணை ரூபா.3,548,784,649 ஆனது மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக இனங்காணப்பட்டிருந்தது. | 2022 நிதி அறிக்கைகளில் ஒரு கொள்கை வெளியிடப்பட்டது. | நிதி அறிக்கையில் மீள்காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணை வருமானத்தை அங்கீகரித்து அளவிடுவதற்கானவெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (b.) LKAS 08 இன் பந்தி 13 இன் படி- கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள்,நிறுவனமானது ஒரே மாதிரியான கொடுக்கல் வாங்கல்களுக்கு அதன் கணக்கீட்டுக் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்து | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | முகாமைத்துவமானது நிலையான கணக்கீட்டுக் கொள்கையைப் பயன்படுத்தி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் ஆகியவற்றை மதிப்பிட வேண்டும். |

தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். இருப்பினும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மதிப்பீட்டிற்கு நிதியமானது வெவ்வேறு கொள்கைகளைப் பயன்படுத்தியிருக்கிறது. 2019 இல் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளைக் கணக்கிடுவதற்கு நிதியமானது சராசரி விளைவினைப் பயன்படுத்தியிருக்கிறது. எவ்வாறாயினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளைக் கணக்கிடுவதற்கு வாங்கும் விளைவு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் மதிப்பீட்டு முறையை முதலீட்டுக் கொள்கை வரையறுக்கவில்லை.

### 1.5.4கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) கட்டுப்பாட்டு பொதுப் பேரேட்டுக் கணக்கின் படி பெறவேண்டிய மீள்காப்புறுதி நிலுவைகள் ரூபா.1,590,481,053 மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வயது பகுப்பாய்வு அறிக்கையின் படி பெறவேண்டிய மீள்காப்புறுதி ரூபா.1,581,447,299 ஆகும். எனவே, கட்டுப்பாட்டு பொதுப் பேரேட்டுக் கணக்கு பெறவேண்டிய மீள்காப்புறுதி மற்றும் வயது பகுப்பாய்வு அறிக்கை பெறவேண்டிய மீள்காப்புறுதி என்பவற்றுக்கிடையே ரூபா.9,033,754 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. நிதியத்தால் தயாரிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் படி,இந்த வேறுபாடானது வயது பகுப்பாய்விலிருந்து ஒரு காப்புறுதி கம்பனியிடமிருந்து பெறவேண்டிய நிலுவைகள் ரூபா. 9,053,364 இன் விடுபாட்டினை குறிக்கிறது. மேலும் அடையாளம் காணப்படாதரூபா.19,610 வித்தியாசமானது | மீள்காப்புறுதி வணிகத்தின் தன்மையின் படி,விகிதாசாரஒப்பந்தக் கணக்குகள் இறுதி செய்யப்பட்டு காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடப்படுகின்றன.அதாவது விகிதாசார ஒப்பந்த விதிமுறைகளைப் பொறுத்து 45 நாட்கள் அல்லது 60 நாட்களுக்குள் காலாண்டு விகிதாசார ஒப்பந்தக் கணக்குகள் சரிபார்ப்பு மற்றும் விலைப்பட்டியல் நோக்கத்திற்காக மீள்காப்புறுதியாளருக்கு (NITF) தெரிவிக்கப்படும்.எனவே, ஒவ்வொரு மீள்காப்புறுதியாளரும், வணிகத்தின் விலைப்பட்டியலிற்கு ஒரு காலக்கெடுவை பராமரிக்கிறார்கள்.பொதுவாக, ஒவ்வொரு வருடமும் மூன்றாம் காலாண்டில் காலக்கெடு அமைக்கப்படும்.எனவே மீள் காப்புறுதி தவணை வருமானத்தை அங்கீகரிப்பதற்கான நடைமுறையானது முந்தைய நிதியாண்டின் கடைசி காலாண்டு மற்றும் நடப்பு நிதியாண்டின் முதல் மூன்று காலாண்டுகளின் தவணை வருமானத்தைப் பெறுவதாகும்.எனவே,NITF இன் | முகாமைத்துவம் சரியான நேரத்தில் வேறுபாடுகளைக் கண்டறிந்து, அந்த வேறுபாடுகளை சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டிருந்தது.எவ்வ ாறாயினும், மதிப்பாய்வில் உள்ள ஆண்டிற்கான நிதி அறிக்கைக்கு ஏதேனும் சீராக்கம் தேவையா என்பதை முடிவு செய்யவதற்கு அடையாளம் காணப்பட்ட விடுபாடு ரூபா.9,053,364 இற்கான சான்று கணக்காய்விற்கு கிடைப்பனவற்றதாக உள்ளது. | அனைத்து விகிதாசார ஒப்பந்த ஏற்பாடுகளும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 30 அன்று என காலக்கெடு கருதி விலைப்பட்டியல் செய்யப்படுகின்றன. மீள்காப்புறுதி வணிக வகுப்பிற்கு எழுத்துறுதி ஆண்டு அடிப்படையில் மொத்த எழுதப்பட்ட தவணையை (GWP) அங்கீகரிக்கும் முன்மொழியப்பட்ட முறையைப் பயன்படுத்த முடியாது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். | |
| (b.) | நிதி அறிக்கையின் படி ஊழியர் இடர் கடன் மீதி மற்றும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்ட விபரமான அட்டவணை என்பவற்றுக்கடையில் ரூபா.568,087 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | முகாமைத்துவம் நிதிப் பதிவேடுகளில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து, அந்த பதிவுகளை சரியான நேரத்தில் சரி செய்ய வேண்டும். |
| (c.) | 2020 ஆம் ஆண்டிற்கான நிர்வாகச் செலவுகள் ரூபா.3,445,057 ஆனது 2021 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும்,2021 ஆம் ஆண்டிற்கான நிர்வாகச் செலவுகள் ரூபா.2,280,680 ஆனது 2022 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. எனவே, ஆண்டுக்கான மொத்தச் செலவுகள் மிகைப்படுத்தப்பட்டிருந்தது அத்துடன் ஆண்டுக்கான லாபம் ரூபா.1,164,377 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறோம். | சரியான கணக்கியல் காலத்திற்கான செலவுகளை அடையாளம் காணவும் மற்றும் அட்டுரு அடிப்படையில் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் பொருத்தமான செயல்முறைகள் இருப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (d.) | 2020 இன் திருத்தப்பட்ட நிதி அறிக்கைகளின் படி, நிறுவனம் மீள்காப்புறுதிக்கான வருமான அங்கீகாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. எவ்வாறாயினும்,LKAS 8 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழைகள்- பந்தி 13 இன் படி மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான அத்தகைய கொள்கை தொடர்ந்து வெளியிடப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி அறிக்கைகளில் | மீள்காப்புறுதிக்கான வருவாய் அங்கீகாரக் கொள்கையை நிதியம் வெளியிடவில்லை என்றாலும், அதே கொள்கை தொடர்ந்து பயன்படுத்தப்படவில்லை என்று அர்த்தம் இல்லை, இருநாதலும் 2020 மற்றும் 2021 ஆகிய இரண்டு வருடங்களுக்கும் நிதியமானது அதே கொள்கையை எழுத்துறுதி செய்வதற்கு பயன்படுத்தியுள்ளது. மேலும், நிதியம் மிகையாகக் குறிப்பிடப்பட்ட ரூபா.39,179,361 தொகையுடன் உடன்படவில்லை. 2020 இல் வெளியிடப்பட்ட மீள் காப்புறுதியின் தவணை அங்கீகாரத்திற்கான கொள்கையின் படி, உள்நோக்கிய விகிதாசார | முகாமைத்துவம் பொருந்தக்கூடிய அறிக்கையிடல் கட்டமைப்பின் அடிப்படையில் வருவாய் அங்கீகாரக் கணக்கீட்டுக் கொள்கையை உருவாக்கி அதற்கேற்ப வருவாயை அங்கீகரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்ட கொள்கையின் படி, விகிதாசார ஒப்பந்த மீள் காப்புறுதி தவணையானது மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலுடன் இடரை மாற்றுகின்ற காப்புறுதி நிறுவனத்திடமிருந்து (cedants with the leader) அவ்வப்போது பெறுகின்ற முறையான அறிவிப்பு ஆலோசனை ஆவணம் பெறப்பட்ட போது இனங்காணப்படும். எவ்வாறாயினும், 2021 க்கு முந்தைய மீள் காப்புறுதி தவணையான ரூபா.723,971,289 மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும் மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தல் மற்றும் அவ்வப்போது பெறுகின்ற முறையான அறிவிப்பு ஆலோசனை ஆவணம் ஆகியவை தாமதமாக பெறப்பட்ட காரணத்தால் காலத்திற்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா.684,791,928 ஆனது 2022 ஆம் ஆண்டிற்கான காலப்பகுதிக்கு இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஆண்டுக்கான வருமானமானது ரூபா.39,179,361ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஒப்பந்த மீள்காப்புறுதி தவணைகள்,நிறுவனத்தின் உறுதிப்படுத்தலுடன் இடரை மாற்றுகின்ற காப்புறுதி நிறுவனத்திடமிருந்து (cedants with the leader)அவ்வப்போது பெறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. | |
| (e.) | 2020 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி அறிக்கைகளால் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் படி, விகிதாசாரமற்ற ஒப்பந்த மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான மீள் காப்புறுதிதவணையானது ஆண்டுக்கான மொத்த எழுதப்பட்ட தவணை (GWP)ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் ஏற்கனவே | நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது. | முகாமைத்துவம் பொருந்தக்கூடிய அறிக்கையிடல் கட்டமைப்பின் அடிப்படையில் வருவாய் அங்கீகாரக் கணக்கீட்டுக் கொள்கையை உருவாக்கி அதற்கேற்ப வருவாயை அங்கீகரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவப்பட்ட ஒப்பந்த தவணையின் அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுடன் தொடர்புடைய மீள் காப்புறுதி தவணையான ரூபா.35,138,723 ஆனது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும் ஆண்டுக்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா.15,800,799 ஆனது 2022 ஆம் ஆண்டில் அடையாளங்காணப்பட்டிருந்தது. கால முடிவில் கிடைக்கக்கூடிய மேலதிக தகவல்கள் மற்றும் மேம்பாடுகளுடன் ஒப்பந்தங்களை மீளாய்வு செய்வதன் மூலம் தொடர்புடைய சீராக்கங்கள் செய்யப்படாததால் இது நிகழ்ந்தது. இதன் காரணமாக, ஆண்டுக்கான வருமானமானது ரூபா.19,337,924 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (f.) | அமையத்திற்கேற்ற (Facultative) மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான கணக்கீட்டு கொள்கையின் படி, மீள் காப்புறுதிக்கான தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலைப் பெற்ற பிறகு காப்புறுதி தவணை இனங்காணப்பட்டிருந்தது. எனவே, முந்தைய ஆண்டுக்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணையான ரூபா.143,783,983 ஆனது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இனங்காணப்பட்டிருந்தது. மேலும் காலத்திற்கான தொடர்புடைய மீள் காப்புறுதி தவணை ரூபா.170,065,932 ஆனது 2022 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஆண்டுக்கான வருமானமானது | NITF ஆனதுகுறைவாகக் குறிப்பிடப்பட்ட ரூபா.26,281,949/- உடன்உடன்படவில்லை.ஏனெனில்2020 இல் வெளியிடப்பட்ட மீள் காப்புறுதியின் தவணை அங்கீகாரத்திற்கான கொள்கையின் படி,தலைமை நிறுவனத்தின் உறுதிப்படுத்தலைப் பெற்ற பிறகு, குறிப்பிட்ட நிதிக் காலத்தில் கருதப்படும் அமையத்திற்கேற்ற (Facultative) இடர்களைப் பொறுத்து, உள்நோக்கிய அமையத்திற்கேற்ற (Facultative) மீள் காப்புறுதி தவணை நிதியாண்டில் அங்கீகரிக்கப்படுகின்றன. அதன்படி, கொள்கையின் படி உறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்குப் பிறகு அமையத்திற்கேற்ற (Facultative) காப்புறுதி தவணை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. | சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க முகாமைத்துவம் வருமானத்தை இனங்காண வேண்டும்.<br><br>அமையத்திற்கேற்ற (Facultative) மீள் காப்புறுதி |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.26,281,949ஆல் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (g.) | நான்கு (04) வங்கிக் கணக்குகளில் ஒன்பது (09) மாதங்கள் தொடர்பில் வங்கி இணக்கக்கூற்றில் இணைக்கப்பட்ட காசுப்புத்தக மீதிகளுக்கும் 19 மே 2022 கணக்காய்வு திகதியில் அமைப்பின் படி காசுப்புத்தக மீதிகளுக்கும் இடையே வித்தியாசம் ரூபா.3,408,464 ஆனது அவதானிக்கப்பட்டிருந்தது. | இந்த வேறுபாடுகள் சீல்லியன் (Zillion) CB அமைப்பில் பராமரிக்கப்படும் நான்கு வங்கிக் கணக்குகளில் இருக்கலாம்,அதேசமயம் மற்ற வங்கிக் கணக்குகள் SAGE இல் பராமரிக்கப்படுகின்றன.ஜில்லியன் (Zillion) வங்கி இணக்கக்கூற்று விடயத்தில், வங்கி இணக்கக்கூற்று தயாரிப்பிற்குப் பிறகு சேமிக்கப்படும், ஏனெனில் அடுத்தடுத்த இணக்கக்கூற்றுகள் உண்மையான இணக்கக்கூற்றினை மாற்றுகின்றன. | முகாமைத்துவம் சரியான நேரத்தில் வேறுபாடுகளைக் கண்டறிந்து, அந்த வேறுபாடுகளை சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (h.) | சொத்தினை பயன்படுத்தும் உரிமை தொகை ரூபா.5,351,298, சொத்தினை பயன்படுத்தும் உரிமையின் மீதான குத்தகைப் பொறுப்பு தொகை ரூபா.7,339,958 மற்றும் சொத்தினை பயன்படுத்தும் உரிமையின் நிதிச் செலவு தொகை ரூபா.2,259,970 ஆகியவை மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதியமானது 2022 ஆம் ஆண்டில் இந்த பிழையை கண்டறிந்துள்ளது மற்றும் 2022 ஆம் ஆண்டில் தொடர்புடைய சீராக்கங்கள் செய்யப்பட்டன. | கணக்கீட்டு குறைபாடுகளை சரியான நேரத்தில் சரி செய்ய முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

**1.5.5கணக்காய்விற்கு உரிய ஆவணச் சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை**

| விடயம் | தொகை (ரூபா) | கிடைப்பனவு அற்ற ஆவணச் சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (a.) பெற வேண்டிய வருமான வரி | 22,465,243 | வரிக் கணக்கிடல் மற்றும் உறுதிப்படுத்தல்கள் | இந்த நிதியானது SRCC மற்றும் NITF க்கு இரண்டு தனித்தனி பொதுப் பேரேடுகளை பராமரிக்கிறது.இருப்பினும்,NITF ஆனதுஉள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் (IRD) பதிவுசெய்யப்பட்ட ஒரு TIN ஐக் கொண்டுள்ளது.மதிப்பீட்டின் முந்தைய ஆண்டில் ரூபா.22,465,243 தொகையான ESCவரிச் செலவாகக் கோரப்பட்டிருக்கிறது. SRCC பிரிவின் வரி லாபம் காரணமாக CIT பொறுப்பு | பயனுறுதி வாய்ந்த கணக்காய்வுச் செயல்பாட்டிற்கு சரியான நேரத்தில் தகவல் கிடைப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்பட்டது, ஆனால் SRCC அல்லாத பிரிவின் கீழ் ESC செலுத்தியிருக்கிறது. எனவே, ஒரு பொதுப் பேரேட்டில் இந்த உரிமைகோரல் தொகை செலுத்த வேண்டிய வரி (எதிர்மறை) இருப்பாகத் தோன்றும். |
| (b.) பெற வேண்டிய வாடகை வைப்பு | 2,180,969 | கொடுப்பனவுக் கைச்சாத்து மற்றும் உடன்படிக்கை | CGIR வழங்கிய களஞ்சியம் தொடர்பான வாடகை வைப்புத் தொகை மீதியாகும்.அனைத்து மூல ஆவணங்களும் உங்கள் சரிபார்ப்புக்கு கிடைப்பனவாக உள்ளன. |
| செலுத்த வேண்டிய மீள்நிதியளிக்க வேண்டிய வைப்பு | 892,693 | பற்றுச்சீட்டு மற்றும் உடன்படிக்கை | |
| (c.) நீண்ட நிலுவையில் உள்ள செலுத்த வேண்டிய மீதிகள் | 282,865,828 | பற்றுச்சீட்டு மற்றும் உடன்படிக்கை | இந்த அவதானிப்புக்கு பதிலளிக்க NITF க்கு இன்னும் விரிவான தகவல்கள் தேவை. |
| (d.) கொடுப்பனவுக் கைச்சாத்து | 2,490,462 | துணை ஆவணங்களுடனான கொடுப்பனவுக் கைச்சாத்து | அனைத்து கொடுப்பனவுக் கைச்சாத்துகளும் உங்கள் சரிபார்ப்புக்கு கிடைப்பனவாக உள்ளன. |
| (e.) பொதுநாட்குறிப்பு கைச்சாத்து | 2,584,778,761 | துணை ஆவணங்களுடனான பொதுநாட்குறிப்பு கைச்சாத்து | அனைத்து மூல ஆவணங்களுடனான பொதுநாட்குறிப்பு கைச்சாத்துகளும் உங்கள் சரிபார்ப்புக்கு கிடைப்பனவாக உள்ளன. |
| (f.) வெள்ளம் மற்றும் வெள்ளம் அல்லாதவற்றிற்கு செலுத்தப்பட்ட மீள் காப்புறுதி உரிமைகோரல்கள் | 1,298,922,574. | பணம் செலுத்துவதற்கான துணை ஆவணங்களுடனான விரிவான அட்டவணை | 2021 ஆம் ஆண்டிற்கான வெள்ளம் மற்றும் வெள்ளம் அல்லாதவற்றுக்கான செலுத்தப்பட்டமீள் காப்புறுதி உரிமைகோரல் தொடர்பான தகவல்கள் உங்கள் சரிபார்ப்புகளுக்கு கிடைப்பனவாக உள்ளன. |
| (g.) மீள்காப்புறுதி நிலுவையில் உள்ள உரிமைகோரல் ஏற்பாடு | 2,341,883,754 | மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்கள், அறிவிப்புகள், இணக்கக்கூற்று, உரிமைகோரல் தீர்வு அட்டவணைகள் மற்றும் | செலுத்த வேண்டிய மீள் காப்புறுதி உரிமைகோரல்களுக்கான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களைப் பெற NITF ஏற்கனவே மின்னஞ்சல்களை அனுப்பியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | முகாமைத்துவக் கருத்துகள் | எவ்வாறாயினும், நிலுவையில் உள்ள அனைத்து உறுதிப்படுத்தல்களும் பின்தொடரப்பட்டு வருகின்றன,NITF அந்த உறுதிப்படுத்தல்களைப் பெற்றவுடன், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்க்கு அனுப்பப்படும். |
| (h.) நிலுவையிலுள்ள பெறவேண்டிய உள்நோக்கிய மீள்காப்புறுதி தவணை | 1,457,619,423 | மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்கள், விலைப்பட்டியல்கள், பற்றுச்சீட்டுகள், இணக்கக்கூற்று, சேகரிப்பு அட்டவணைகள், வயது பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவக் கருத்துகள் | பெற வேண்டிய மீள் காப்புறுதி உரிமைகோரல்களுக்கான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களைப் பெற NITF ஏற்கனவே மின்னஞ்சல்களை அனுப்பியுள்ளது. எவ்வாறாயினும், நிலுவையில் உள்ள அனைத்து உறுதிப்படுத்தல்களும் பின்தொடரப்பட்டு வருகின்றன,NITF அந்த உறுதிப்படுத்தல்களைப் பெற்றவுடன், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்க்கு அனுப்பப்படும். இருப்பினும்,தேசிய கணக்காய்வு அலுவலக அதிகாரிகளால் முன்பு செய்யப்பட்டது போல சரிபார்ப்புக்கான மாற்று நடைமுறையை மேற்கொள்ள முடியுமாக இருக்கும். |
| (i.) Retroமற்றும் தேசிய இயற்கைப் பேரிடர் காப்புறுதித் திட்ட (NNDIS) பெறவேண்டிய மீள்காப்புறுதி | 1,102,142,174 | வயது பகுப்பாய்வு | NITF சரியான நேரத்தில் புள்ளிவிவரங்களை சமர்ப்பிக்கும். |

**1.6 பெற வேண்டியவைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பெற வேண்டிய மீள் காப்புறுதி தவணை ரூபா.149,602,423 தொகையானது ஒரு (01) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த மீள் காப்புறுதி | நிதியமானது காப்பறுதிக் கம்பனிகளுக்கு மாதாந்த நினைவூட்டல்களை அனுப்புகிறது. | நிலுவைத் தொகையை வசூலிக்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

தவணையில் 9% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மற்றும் ரூபா.104,522,202 தொகையானது இரண்டு (02) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது பெற வேண்டிய மொத்த தொகையில் 7% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரூபா.290,717,054 தொகையானது மூன்று (03) வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ளது. இது மொத்த நிலுவைத் தொகையில் 18% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதன்படி, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பெற வேண்டிய மீள் காப்புறுதி மீதிகளை மீளப்பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறுவனம் எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**1.7சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரிவு 7, 31(2)மற்றும் 49 | நான்கு (04) காலாண்டு திரும்பல்கள் அதன் சார்பாக உருவாக்கப்பட்ட விதிகளாகத் கொண்ட தகவல்களை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.எவ்வாறாயினும் ,காலாண்டு மற்றும் வருடாந்திர அறிக்கைகள் 17 முதல் 362 நாட்கள் தாமதத்துடன் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஒரு வருடத்திற்கு 04 காலாண்டு வருமானங்களை மட்டுமே IRCSL க்கு சமர்ப்பிக்க வேண்டும்.1ம் காலாண்டு, 2ம் காலாண்டு , 3ம் காலாண்டு மற்றும் 4ம் காலாண்டு வருமானங்கள் முறையே 23,32,46 மற்றும் 17 நாட்கள் தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டன.எவ்வாறாயினும்,28/04/2022 அன்று சமர்ப்பிக்க வேண்டிய திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக வருடாந்த வருமான அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியுமாக இருக்கும்.இந்த தாமதங்கள் அனைத்தும் பயணக் கட்டுப்பாடுகள், பொது முடக்கம், சோதனை செய்யப்பட்ட நேர்மறை எண்ணிக்கையிலான ஊழியர்களின் வழக்குகள் போன்ற கோவிட் 19 தொற்றுநோய்களின் தாக்கத்தின் காரணத்திலாகும். | ஒழுங்குமுறைப்படுத்தல் வருமானங்களை சமர்ப்பிப்பதில் எதிர்கால தாமதங்களைத் தவிர்க்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (b.) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 6(1)(e) | சட்ட ஏற்பாடுகளின் படி, நிதி, வங்கி, காப்புறுதி,முகாமைத்துவம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் தகுதிகள் அல்லது நிபுணத்துவம் பெற்ற நபர்களில் இருந்து மூன்று (03) நபர்கள் அமைச்சரால் நிதியத்தின் சபையிற்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.இருப்பினும்,31 டிசம்பர் 2021 நிலவரப்படி, இரண்டு (02) சபை பதவிகள் இன்னும் வெற்றிடமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 6.1 இன் படி,நிதியத்தின் சபையானது தலைவர் உட்பட ஏழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.அதன்படி, 16 நவம்பர் 2022 அன்று சட்டத்தின் பிரிவு 6 (1) (e) இன் படி இரண்டு வெற்றிடங்கள் அமைச்சரால் நிரப்பப்பட்டன.எனவே, 16 நவம்பர் 2022 திகதியிலிருந்து, நிதியத்தின் சபையின் தொகுப்பு நிறைவடைகிறது. | நிதியமானது சட்டத்தின் விதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (c.) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பிரிவு 13(e) | சட்ட ஏற்பாடுகளின் படி, நிதியம் தொடர்பாக ஒரு பொதுவான கணக்கும் மற்றும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் பிரிக்கக் கூடிய தனியான கணக்கும் பேணப்பட வேண்டும். இருப்பினும், தனிப்பட்ட உறுப்பினர்களுக்கான பிரிக்கக் கூடிய தனியான கணக்குகள் நிதியத்தால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட கணக்கு விவரங்கள் தகவல் அமைப்பில் பராமரிக்கப்படுகின்றன. கட்சிக்காரர் NIC ஐப் பயன்படுத்தி அவற்றை அணுகுதல் சாத்தியமாகும். | நிதியமானது சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (d.) 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் பந்தி 23 | சட்ட ஏற்பாடுகளின் படி, அத்தகைய காப்புறுதி கம்பனிகள் துல்லியமாக நிதியத்திற்கு திரட்டப்பட்ட தொகையை விலைப்பட்டியலிட்டு அனுப்பியுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக காப்புறுதிக் கம்பனியின் பதிவுகளை ஆய்வு செய்வதற்குதேவையான நடவடிக்கைகளை நிதியம் எடுக்கவில்லை. | நிதியம் அவதானிப்புடன் உடன்படுகிறது.வழக்கமாக, உள்ளக கணக்காய்வுப் பிரிவு காப்புறுதிக் கம்பனிகளின் வருமான சரிபார்ப்பை மேற்கொள்கிறது. இருப்பினும், கோவிட் தொற்றுநோய் காரணமாக, இந்த சரிபார்ப்பு செயல்படுத்தப்படவில்லை. | நிதியமானது சட்டத்தின் பொருந்தக்கூடிய விதிகளுக்கு இணங்க வேண்டும் மற்றும் முழுமையான மற்றும் சரியான நேரத்தில் வருவாய் வசூலிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (e.) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பந்தி 40(1) | நிறுவனத்தின் ஆளுகைக் குழு நிதியத்திற்கு உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும். இருப்பினும், பெப்ரவரி 2020 முதல் அக்டோபர் 2021 வரை உள்ளக கணக்காய்வுச் | IRCSL வழங்கிய வழிகாட்டுதலின் படி, உள்ளக கணக்காய்வாளரை மாற்ற வேண்டும்.எனவே, உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்திற்கு உள்ளானது. இருப்பினும், பிரிவின் செயல்பாடு தொடரப்பட்டது. | கணக்காய்வுக் குழுவின் வினைத்திறனான செயல்பாட்டை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒரு பிரிவில் வெற்றிடமான பதவி என்பது அதன் செயல்பாடுகளை நிறுத்துவது என்று அர்த்தமல்ல. | |
| (f.) நிதி ஒழுங்குவிதிகள் 386(7) | காசோலைகள் ரத்துச் செய்யப்பட்டாலும் கூட அது அடியிதழோடு பொருத்தப்பட்டு காசோலைப் புத்தகத்தில் தக்கவைக்கப்பட வேண்டும். நிதியமானதுகொடுப்பனவுக் கைச்சாத்தோடு காசோலை அடியிதழை இணைத்திருக்கிறது. இதன் விளைவாக, உறுச்சீட்டு ஏதேனும் இடம் தவறி விட்டால் ரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான அனைத்து விபரங்களும் தொலைந்து போகலாம். | அச்சிடும் நோக்கங்களுக்காக NITF தொடர்ச்சியான காசோலைச் சுருளைப் பயன்படுத்துவதால், (காசோலைகள் கைமுறையாக எழுதப்படாததால் காசோலை புத்தகங்கள் பயன்படுத்தப்படுவதில்லை) காசோலை அடியிதழை தனித்தனியாக கோப்பு செய்வது நடைமுறையில் சாத்தியமில்லை.எனவே, கொடுப்பனவுக் கைச்சாத்துடன் காசோலை அடியிதழ் இணைக்கப்பட்டு, கோப்பு செய்யப்படுகிறது.உறுதிச்சீட்டு ஏதேனும் தவறி விட்டால், அனைத்து விவரங்களும் ACCPAC அமைப்பில் கிடைக்கும், அங்கு இடுகையிட்ட பிறகு எந்த உறுதிச்சீட்டு விவரங்களையும் மாற்ற முடியாது.இருப்பினும், ரத்து செய்யப்பட்ட காசோலைகள் அடியிதழில் ஒட்டப்பட்டுள்ளன. | முகாமைத்துவமானது நிதித் தகவல்களைப் பாதுகாக்க நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (g.) நிதி ஒழுங்குவிதிகள் 395(b) | வங்கி இணக்கக் கூற்று சம்மந்தப்பட்ட பணம் செலுத்தும் அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும், மற்றும் ஆய்வுக்காக கணக்காய்விற்கு கிடைப்பனவு உள்ளதாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், பதினெட்டு (18) வங்கிக் கணக்குகளுக்காக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுக்கள் பெயர், பதவி மற்றும் திகதி இல்லாமல் சான்றளிக்கப்பட்டிருந்தன. | நிதி ஒழுங்குவிதிகள் 395(b) பிரிவு (h.) கூறுகிறது, வங்கியின் சான்றிதழில் காட்டப்பட்டுள்ள நிலுவைத்தொகையுடன், திணைக்களத்தின் காசுப்புத்தகத்தின் மீதியை இணங்க வைக்கும் கூற்று வங்கி இணக்கக் கூற்று எனப்படும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். இது சம்மந்தப்பட்ட பணம் செலுத்தும் அதிகாரியால் சான்றளிக்கப்பட்டு, ஆய்வுக்காக கணக்காய்விற்கு கிடைப்பனவாக இருக்க வேண்டும். மேற்கூறிய பிரிவின் படி, அனைத்து இணக்கக் கூற்றும் சம்மந்தப்பட்ட பணம் செலுத்தும் அதிகாரியால் சான்றளிக்கப்பட்டது, எனவே எந்த மீறலும் இல்லை. | முகாமைத்துவம் நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (h.) நிதி ஒழுங்குவிதிகள் 446 | தொடர் எண் வரிசை கிடைக்காததாலும் மாற்றங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கையொப்பங்கள் கிடைக்காததாலும் SRCC & Tr நிதியத்தின் சில்லறைக் காசேடு சரியாகப் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | NITF அவதானிப்புடன் உடன்படுகிறது. | முகாமைத்துவம் நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (i.) நிதி ஒழுங்குவிதிகள் 446(1)(c) | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத நிதியத் (SRCC & Tr Fund)திணைக்களமானது காசேட்டினை இன்றுவரை எழுதியிருக்கவில்லை,மற்றும் தினசரி அல்லது மாதாந்த அடிப்படையில் மொத்தப்படுத்தியோ சமப்படுத்தியோ இருக்கவில்லை மேலும்,ஒரு மேற்பார்வை அல்லது பொறுப்பான பணி அதிகாரி மூன்று (03) வங்கிக் கணக்குகள் தொடர்பான பணப் புத்தகத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை. | NITF அவதானிப்புடன் உடன்படுகிறது. | முகாமைத்துவம் நிதிப் பிரமாணத்தில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (j.) 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி 2/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 4 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்வதற்கான செலவை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஏற்க வேண்டும். இருப்பினும், நிதியமானது 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா.168,700செலவு செய்வதன் மூலம் ஊழியர்களுக்கான கையடக்கத் தொலைபேசிகளை கொள்வனவு செய்திருந்தது. மேலும்,நிதியத்தினால் 2016 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் வாங்கிய | வணிகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, உத்தியோகபூர்வ செயல்பாடுகளின் பொருட்டு, ஊழியர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை நிதியம் கொள்வனவு செய்ய வேண்டும். அதற்கு மேலதிகமாக, அவை நிதியத்தின் சொத்துக்களாகப் பதிவு செய்யப்பட்டு,பயன்பாட்டிற்காக ஊழியர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன, மேலும் வேலையை விட்டு விலகும் போது அல்லது காலத்தின் முடிவில் ஒதுக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளை நிதியத்திற்குத் திருப்பியளிக்க வேண்டும். எனவே, இது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தனியார் | முகாமைத்துவம் சுற்றறிக்கையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையடக்கத் தொலைபேசிகளுக்கு ரூபா.2,601,071 மொத்தச் செலவு செய்யப்பட்டிருந்தது. | கைப்பேசிக்கான பணம் பெறுதல் அல்ல. | |
| (k.) அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கானபெருநிறுவன ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.2.2(a)(ii)வழிகாட்டுதல் | சட்டத்தின் விதிகளின்படி, குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறை சபைக் கூட்டங்கள் தவறாமல் நடத்தப்பட வேண்டும்.இருப்பினும், 2021 ஏப்ரல், ஜூன், ஜூலை, செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் சபைக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறது.தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக இது ஏற்பட்டது. | முகாமைத்துவம் பெருநிறுவன நல்லாளுகையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (l.) அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான பெருநிறுவன ஆளுகைக்கான 2021 வழிகாட்டுதல்களின் 2.2.2 (b) (xii) வழிகாட்டுதல் | வழிகாட்டுதலின்படி,சபைத் துணைக் குழுக்களின் நியமனம் மற்றும் முறையான செயல்பாட்டை சபை உறுதி செய்ய வேண்டும்.எவ்வாறாயினும் , இடர் குழு, தொடர்புடைய கட்சி கொடுக்கல் வாங்கல்கள் மீளாய்வுக் குழு போன்ற சபைத் துணைக்குழுக்கள் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் செயற்பட்டிருக்கவில்லை. | நிதியம்அவதானிப்புடன் உடன்படுகிறது.தொற்றுநோய் காரணமாக இது நடைமுறையில் இல்லை. மேலும், மீளாய்வு செய்யப்பட வேண்டிய காலகட்டத்தில் தொடர்புடைய கட்சிப் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை. | முகாமைத்துவம் பெருநிறுவன நல்லாளுகையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |
| (m.) 2017 பெருநிறுவன ஆளுகையின் சிறந்த நடைமுறைக்கான கொள்கை G.2 குறியீடு | சபை ஒரு தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரியை (CISO) நியமிக்கவில்லை அல்லது அந்த நிறுவனத்திற்காக இணைய பாதுகாப்பு இடர் முகாமைத்துவக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பெருநிறுவன நல்லாளுகையின் சிறந்த நடைமுறை குறியீடு 2017 பகிரங்கமாக பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகள் மற்றும் பிற பெரிய கம்பனிகளால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.நிதியம் தற்போது கிடைப்பனவாக இருக்கிறது மற்றும் தகவல் தொழிநுட்ப முகாமையாளருடன் நியமிக்கப்பட்டது. | முகாமைத்துவம் பெருநிறுவன நல்லாளுகையில் உள்ள தேவைப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும். |

**1.8 முதலீட்டு நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) நிதியத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு கொள்கை இருக்கவில்லை. வரைவுக் கொள்கை | இந்த நிதியமானது சபையால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு கொள்கையைக் கொண்டுள்ளது. மேலும் அதிகாரக் கையளிப்பில் முதலீட்டிற்கான | நிதிகளின் முதலீடு திறம்பட செயல்படுவதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, முன்மொழியப்பட்ட முதலீட்டு வரம்புகளுடன் வரைவுக் கொள்கையைச் சமர்ப்பிக்க குழு பரிந்துரைத்தது. இருப்பினும், மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதிகார வரம்புகள் சபையால் அங்கீகரிக்கப்படுகின்றன.<br><br>எவ்வாறாயினும், பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயல்பாட்டு கையேட்டின் படி கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசுக்கு சொந்தமான முயற்சிகளின் சபைகளின் நிலையான வருவாய் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூபா.30 பில்லியன். எனவே, இந்த பிரிவின் கீழ் NITF ற்கு எந்தத் தேவையும் பொருந்தவில்லை. | |
| (b.) | நிதியத்தின் வரைவு முதலீட்டுக் கொள்கையின் பந்தி 17 இன் படி, முதலீட்டுக் குழு அவ்வப்போது கூடி, முதலீட்டுக் குழுவின் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக முதலீட்டுக் குழு கூட்டப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயல்பாட்டு கையேட்டின் படி கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசுக்கு சொந்தமான முயற்சிகளின் சபைகளின் நிலையான வருவாய் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூபா.30 பில்லியன். எனவே, கூறப்பட்ட பிரிவின் கீழ் நிதியத்திற்கு எந்தத் தேவையும் பொருந்தவில்லை. | முதலீட்டுக் குழுவின் திறம்பட செயல்பாட்டிற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (c.) | முதலீட்டுக் கொள்கையை வழக்கமான அடிப்படையில் மீளாய்வு செய்ய முதலீட்டுக் கொள்கையில் எந்த ஏற்பாடும் இல்லை. மேலும், முதலீட்டுக் கொள்கையானது அதன் அமுலாக்கத்திற்குப் பிறகு சபையால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மற்றும் சரியான நேரத்தில் கொள்கையில் தேவையான மேம்பாடுகளை இணைத்திருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறது.இருப்பினும், கூறப்பட்ட பிரிவின் கீழ் நிதியத்திற்கு எந்தத் தேவையும் பொருந்தவில்லை. | சபையானது உள்ளகக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அவ்வப்போது வழக்கமான அடிப்படையில் மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (d.) | முதலீட்டு முகாமையாளரின் வகிபாகம் வரைவு முதலீட்டுக் கொள்கையின் பந்தி 13 இல் வரையறுக்கப்பட்டிருந்தாலும், இந்த பதவி 13 ஆகஸ்ட் 2020 முதல் வெற்றிடமாகவே உள்ளது. | பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயல்பாட்டு கையேட்டின் படி கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசுக்கு சொந்தமான முயற்சிகளின் சபைகளின் நிலையான வருவாய் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூபா.30 பில்லியன். எனவே, கூறப்பட்ட பிரிவின் கீழ் நிதியத்திற்கு எந்தத் தேவையும் பொருந்தவில்லை. | நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகளின் திறம்பட்ட செயல்பாட்டிற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (e.) | முதலீட்டுக் கொள்கையின் படி, பொருளாதார | ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு காசுப்பாய்ச்சல் தயாரிக்கப்படவில்லை. | எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| நிலைமைகள், வட்டி வீதங்களின் நடத்தை, எதிர்காலப் போக்குகள் மற்றும் நிதியத்தின் செயல்பாட்டு காசுப்பாய்ச்சல் தேவை ஆகியவற்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் முதலீடுகளை தேர்ந்தெடுக்கிறது. எவ்வாறாயினும், முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுப்பதற்காக அதிகப்படியான காசுப்பாய்ச்சல் மற்றும் அந்த காசுப்பாய்ச்சல்களின் நேரத்தை அடையாளம் காண்பதற்கு காசுப்பாய்ச்சல் முன்கணிப்புக்கள் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தினுடைய வணிகத்தின் தன்மையைப் பொறுத்து, திரவத்தன்மைத் தேவைப்பாடு மற்றும் நிதி இருப்பு ஆகியவை காலம் மற்றும் தொகை பற்றிய முதலீட்டு முடிவை எடுப்பதற்கு முன் தினமும் கண்காணிக்கப்படும்.எனவே, காசுப்பாய்ச்சல் முன்கணிப்பின் அடிப்படையில் அல்லாமல் உண்மையான உருப்படிகளின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தினசரி மீதி மற்றும் முதலீட்டு அறிக்கையின் அடிப்படையில் தினசரி பண இருப்பு மற்றும் அதிகப்படியான நிதி அடையாளங்காணப்படுகிறது.தினசரி முதலீட்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதால்,நிதி அதிகாரக் கையளிப்பின் கீழ்,சபையானது அதன் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் முதலீட்டுக் குழுவிடம் ஒப்படைத்திருந்தது. | முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுக்கும் நேரத்தைக் கண்டறிய காசுப்பாய்ச்சல் முன்கணிப்பைத் தயாரிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (f.) நிதியத்தின் நிதிச் சொத்துக்கள் (முதலீடுகள்) ரூபா.24,954,265,916ஆகும். இது நிதியத்தின் மொத்தச் சொத்துக்களில் 79% ஐ பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் முதலீட்டு முடிவுகளுக்கான நிதி அதிகாரத்தின் பிரதிநிதித்துவமானது முதலீட்டுக் கொள்கையில் முதலீடுகளின் பெறுமதி மற்றும் முதலீடுகளின் மூலங்களின் அடிப்படையில் வரையறுக்கப்படவில்லை. முதலீடுகளின் பெறுமதி மற்றும் மூலங்களைப் பொருட்படுத்தாமல் அனைத்து முதலீடுகளும் முதலீட்டுக் குழுவால் மட்டுமே அங்கிகரிக்கப்பட்டன. | முதலீடுகளுக்கான அனைத்து அங்கிகார வரம்புகளும் நிதி அதிகாரக் கையளிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. | முதலீட்டு நடவடிக்கைகள் திறம்பட செயல்பட முதலீட்டின் பெறுமதி மற்றும் முதலீட்டு மூலங்களின் அடிப்படையில் முகாமைத்துவமானது நிதி அதிகாரத்தை கையளிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா.4,944,217,918 ஆனது வரிக்குப்பின்இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.7,526,099,442 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.2,581,881,524 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய நலன் மற்றும் உரிமைக்கோரல்களில் ஏற்பட்ட ரூபா.2,806,764,782அதிகரிப்பும்,மற்றும் தேறிய உழைத்த தவணைப்பணத்தில் ஏற்பட்ட ரூபா.96,123,417 குறைவும்மற்றும்எழுதப்பட்ட மற்றும் கையகப்படுத்தல் செலவில் ஏற்பட்ட ரூபா.249,059791 அதிகரிப்பும்வீழ்ச்சிக்கான காரணங்களாகும

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| ஆண்டு | 2021 ரூபா. | 2020 ரூபா. | வேறுபாடு ரூபா. | வேறுபாடுவிகிதாசாரத்தில் |
|---|---|---|---|---|
| தேறிய உழைத்த தவணைப்பணம் | 17,378,904,399 | 17,475,027,816 | (96,123,417) | -1% |
| ஏனைய வருமானம் | 1,590,127,784 | 1,387,023,110 | 203,104,674 | 15% |
| தேறிய நலன் மற்றும் உரிமைக்கோரல்கள் | (10,761,281,045) | (7,954,516,263) | (2,806,764,782) | 35% |
| எழுதப்பட்ட மற்றும் கையகப்படுத்தல் செலவு | (1,863,920,737) | (1,614,860,946) | (249,059,791) | 15% |
| ஏனைய செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவு | (392,242,269) | (409,175,576) | 16,933,307 | -4% |
| வருமான வரி | (991,504,005) | (1,339,826,929) | 348,322,924 | -26% |
| ஆண்டிற்கான இலாபம் | 4,944,217,918 | 7,526,099,442 | (2,581,881,524) | -34% |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு கிடைத்த நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் படி, கடந்த நான்கு ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| விகிதம் | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|
| தக்க வைப்பு விகிதம் | 174% | 161% | 143% | 138% |
| மொத்த உரிமைக்கோரல் விகிதம் | 58% | 46% | 60% | 72% |
| செலவு விகிதம் | 8% | 12% | 16% | 16% |
| ஒருங்கிணைந்த விகிதம் | 67% | 57% | 76% | 87% |
| வருமான வளர்ச்சி | 1% | 6% | 18% | 18% |
| இலாப விகிதம் | 56% | 90% | 24% | 34% |
| தேறிய இலாபம் | 26% | 40% | 18% | 21% |
| சொத்து மீதான திரும்பல் விகிதம் | 20% | 37% | 17% | 19% |
| உரிமை மீதான திரும்பல் விகிதம் | 38% | 83% | 43% | 47% |
| திரவ விகிதம் | 1.4 | 1.2 | 0.68 | 0.74 |
| நடைமுறை விகிதம் | 8.78 | 6.26 | 8.92 | 9.34 |
| மொத்தச் சொத்துக்களுக்கு | 81% | 82% | 77% | 76% |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிச் சொத்துக்கள் சொத்துப் புரள்வு | 1.12 | 1.34 | 2.46 | 2.17 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) தரவு பிடிப்பு, வணிகத்தின் முக்கிய வகுப்பைப் பிரித்தல், உரிமைகோரல் எண்ணிக்கைகளை வழங்குதல் மற்றும் உரிமைகோரல் கையாளுதல் செலவுகள் தொடர்பான பரிந்துரைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து ஆயுட்கால மதிப்பீட்டாளரால் செய்யப்பட்டன. எவ்வாறாயினும், நிதியத்தின் தரவு நம்பகத்தன்மையை அதிகரிக்க தேவையான மேம்பாடுகளைச் செய்வதற்கு 2019 ஆம் ஆண்டு முதல் மதிப்பீட்டு அறிக்கை சபை மட்டத்திலோ அல்லது முகாமைத்துவத்தின் பொருத்தமான மட்டத்திலோ கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை. | IRCSL வழிகாட்டுதலின் தேவைப்பாடு போன்றுNITF 75% தரவு நம்பிக்கை அளவைக் கொண்டிருப்பதால், தரவு நம்பிக்கை நிலை தேவையை மேலும் அதிகரிக்கவோ குறைக்கவோ இல்லை. | நிதியத்தின் தரவு நம்பகத்தன்மை மட்டத்தை மேம்படுத்த,ஆயுட்கால கணிப்பாளரால் செய்யப்பட்ட பரிந்துரைகளைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுக்க வேண்டும். |
| (b.) தேவையான ஆயுட்கால மதிப்பீட்டு தகவல்களை சேகரிக்க், தக்கவைக்க மற்றும் ஆயுட்கால மதிப்பீட்டாளர் மற்றும் தேவையான கட்சியினருக்கு வழங்க நிதியத்தினால் ஒரு ஆயுட்கால மதிப்பீட்டு பிரிவு நிறுவப்படவில்லை. | நிதியத்திற்கு ஒரு ஆயுட்கால மதிப்பீட்டு பிரிவு நிறுவப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பான தகவல்கள் நிதிப் பிரிவால் வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றது. | மதிப்பீட்டு செயல்பாட்டின் திறமையான செயல்பாட்டை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |
| (c.) மீள் காப்புறுதி உரிமைக்கோரல் செயல்முறையைக் கையாளுவதற்கான ஆவணப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் செலுத்த வேண்டிய கடப்பாடுகளை அடையாளம் காண்பதற்கு நிதியத்திற்கு கிடைப்பனவு அற்ற தன்மையாக இருக்கிறது. எனவே, முதன்மை அறிக்கை ஆவணத்திலிருந்து மீள் காப்புறுதி கடப்பாட்டினை | முதன்மை தகவல் ஆவணத்தின் அடிப்படையில் உரிமைகோரல் ஒதுக்கங்கள் செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், வணிகத்தின் தன்மைக்கேற்ப தொழில்நுட்ப கருத்துகள், நட்டத்தைச் சரிசெய்வோர் அறிக்கை போன்றவற்றைப் பெற்ற பிறகு இறுதி உரிமைக்கோரல் தொகைகள் தீர்மானிக்கப்படுகின்றன என்பது வெளிப்படையானது. | நிதியத்தின் முக்கிய செயல்பாடுகளுக்கான கொள்கைகள் கிடைப்பனவு உள்ளதாக இருப்பதை முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியம் அடையாளம் கண்டு பதிவு செய்கிறது. | | |
| (d.) | ரூபா.2,726,557 தொகையான 03 காலங்கடந்த மென் கடன் கணக்கு நிலுவைகளின் மீட்பு நினைவூட்டல்கள் 31 டிசம்பர் 2021 வரை நிறுவனத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மூலம் கோரப்பட்ட பிறகு, மீட்பு நினைவூட்டல்கள் 23 ஆகஸ்ட் 2022 அன்று அனுப்பப்பட்டிருந்தன. | நினைவூட்டல்களை அனுப்பவும் மீட்டெடுக்கவும் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டில் கணிசமான தொகை மீட்கப்பட்டது. | மென்மையான கடன் மீதிகளை வசூலிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (e.) | 23 ஆகஸ்ட் 2013 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1842/23 இன் படி, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்காக 10 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து ரூபா.2,681,980 தொகையான நிலுவையில் உள்ள பயிர் வரி கட்டணத்திலிருந்து அபராதம் விதிக்கப்பட்டு நிதியத்தால் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. மற்றும் 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 24 ஆம் பந்தியின் விதிகளின் படி வரியைச் செலுத்தாமைக்கான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | NITF அவதானிப்புடன் உடன்படுகிறது. நிதியம் நினைவூட்டல்களை அனுப்பியிருந்தாலும் கூட, மீட்பு இன்னும் சாத்தியமில்லை. | பயிர் வரியை உரிய காலத்தில் வசூலிக்க தேவையான நடவடிக்கைகளை நிறுவனம் எடுக்க வேண்டும். |
| (f.) | வினைத்திறனான திரையிடல் அமைப்பு மற்றும் அக்ரஹார கோரிக்கை விண்ணப்பங்களுக்கு பணம் செலுத்தும் முறை என்பன இல்லாததால், அக்ரஹார நலன்களுக்கு கொடுப்பனவு வழங்குவதில் நீண்ட கால தாமதம் ஏற்படுவதை அவதானிக்க முடிந்தது. அக்ரஹார உரிமைகோரல் நலன்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை பெறப்பட்ட திகதியின் வரிசையில் பதிவுசெய்து ஏற்றுக்கொள்ளாதது, பெறப்பட்ட நேரத்தில் அதன் துல்லியத்தை சரிபார்த்து ஏற்றுக்கொள்ளாதது, | தற்போது, கொடுக்கல் வாங்கல் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட அக்ரஹார உரிமைக்கோரல் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் பணம் செலுத்தப்படுகிறது.தவறுகளை கையாளுவதற்கும் அதே நடைமுறை பின்பற்றப்படுகிறது. இப்போது, கீழ்வருமாறு தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு விண்ணப்பிக்க இந்த செயல்முறையை மேலும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>-தபால் மூலம் பெறப்பட்ட | முகாமைத்துவம் அதன் உள்ளக உரிமைகோரல் கையாளுதல் நடைமுறையை மேம்படுத்துவதன் மூலம் உரிமைகோரல் கையாளுதலில் வினைத்திறனை மேம்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோரிக்கை விண்ணப்பங்கள் பெறப்பட்டதை எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தாதது மற்றும் கணினி அமைப்பில் உள்ள பலவீனங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு பிரச்சனைகள் போன்றவை அவதானிக்கப்பட்டன. மேலும், தாமதம் பொதுவாக 200 முதல் 240 நாட்கள் வரை எடுக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | அக்ரஹார உரிமைக்கோரல் விண்ணப்பங்களை சரிபார்த்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>-தேவையான ஆவணங்களுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஒப்புகைச் சீட்டை வழங்கப்படுகிறது.<br><br>-பூரணமடையாத உரிமைக்கோரல் விண்ணப்பங்களுக்கு மேலதிக ஆவணங்களைக் கோரிய கடிதத்தை முதல் படியில் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது.<br><br>-மேலும், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பின்னிணைப்பு செயல்முறையை விரைவுபடுத்த, தனியான குழுவை வரிசைப்படுத்துகிறது.<br>-கணினி அமைப்பில் ஏதேனும் பிழை ஏற்பட்டால், அது IT பிரிவால் சரி செய்யப்படுகிறது மற்றும் பிழைகளைக் குறைப்பதற்கும், உள்ளக கட்டுப்பாடுகளுக்கு சில வரம்புகளை ஏற்படுத்துவதற்கும் கணினியில் பல முன்னேற்றங்களைச் செய்கிறது. | |
| (g.) | 2021 ஆம் ஆண்டு முழு வசதியுடன் கூடிய அழைப்பு மையம் ரூபா.21.5 மில்லியன் செலவில் வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் உடனடி சேவையை வழங்க செயல்படுத்தப்பட்டது. இது ஒரே நேரத்தில் 15 வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கும் திறன் கொண்டது. தற்போது, ஒரு நாளைக்கு சராசரியாக 1700 தொலைபேசி அழைப்புகள் வருவதை அவதானிக்க முடிந்தது, மேலும் 2021 பிப்ரவரி நிறுவப்பட்ட நாளிலிருந்து டிசம்பர் 2022 வரை அழைப்பு மையத்திற்கு பெறப்பட்ட மொத்த அழைப்புகளின் எண்ணிக்கை | NITF கொடுக்கப்பட்ட பரிந்துரையை ஏற்றுக்கொள்கிறது மற்றும் தற்போதைய நிலையை பின்வருமாறு குறிப்பிட விரும்புகிறது;<br><br>- அக்ரஹார கொடுப்பனவுகள் தாமதமானதால் பெறப்படும் அழைப்புகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு சுமார் 2,000 அழைப்புகள் வரை அதிகரித்துள்ளதாக அவதானிக்கப்படுகிறது. 15 அழைப்பு மைய முகவர்களால் கூட 2,000 என்ற வரம்பை பூர்த்தி செய்ய முடியவில்லை, அங்கு சராசரியாக தினமும் 1,200-1,500 அழைப்புகளை கையாள முடியும். | முகாமைத்துவமானது வாடிக்கையாளர் சேவையை கையாளவும் மற்றும் உரிமைகோரல் விண்ணப்பங்களை சரியான நேரத்தில் செயல்படுத்தவும் போதுமான மற்றும் திறமையான மனித வளங்களை அழைப்பு மையத்திற்கு ஒதுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 734,626 ஆகும்.பதிலளித்த மொத்த அழைப்புகளின் எண்ணிக்கை 312,350 மற்றும் நிராகரிக்கப்பட்ட அழைப்புகளின் எண்ணிக்கை 422,250 ஆகும். அதன்படி, அழைப்பு மையத்திற்கு வந்த மொத்த அழைப்புகளில் 57 சதவீதம் பதில் அளிக்காமல் நிராகரிக்கப்பட்டது. எனவே, வாடிக்கையாளர்கள் தங்கள் பிரச்சினைகளைக் கையாள்வது மற்றும் பெருநிறுவன உத்தியோகபூர்வ சமூக ஊடகங்கள் மூலம் வழங்கும் சேவைகள் குறித்து தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். விசாரணையின் போது,அழைப்பு மையத்திற்கு போதிய மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்களை நியமிக்க நிதியத்தின் முகாமைத்துவம் தவறியது தெரியவந்தது. பௌதீக கண்காணிப்பின் படி, அழைப்பு மையத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை 4-5 பேர் என்று மட்டுமே காணப்பட்டது. மேலும், அக்ரஹார உரிமைக்கோரல்களை நியாயமான காலக்கெடுவுக்குள் செலுத்தாததே அழைப்பு மையத்திற்கு நாள்தோறும் அழைப்புகள் அதிகரித்து வருவதற்கு காரணம் என தெரியவந்துள்ளது. | - மேலும் 2021-2022 ஆம் ஆண்டில் அரசுத் துறை ஆட்சேர்ப்பு கட்டுப்பாடுகளுடன், டிசம்பர் 2022 இறுதிக்குள் 4-5 நிரந்தர முகாமைத்துவ உதவியாளர்களுடன் மட்டுமே அழைப்பு மையத்தை கையாள வேண்டியிருந்தது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டு முதல் 04 நிரந்தர உதவியாளர்களுடன் 12 பயிற்சி ஊழியர்கள் ஒதுக்கப்பட்டு இருந்தனர். மற்றும் ஜனவரி 2023 முதல் முழுமையாக 15 முகவர்களுடன் அழைப்பு மையம் செயல்படுகிறது.<br><br>- NITF ஆனதுஅக்ரஹாரா பின்னிணைப்பு செயலாக்கத்தை விரைவுபடுத்தியிருக்கிறது மற்றும் 02 மாதங்களுக்குள் நிலுவைத் தொகையை முடிக்க திட்டமிட்டுள்ளது, மேலும் அழைப்புகளின் எண்ணிக்கை உரிய காலத்தில் குறைக்கப்படும். | |

**3.2சர்ச்சை தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) 25 மார்ச் 2008 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1542/11 இன் பந்தி 3(1) இன் படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணையானது அரச | மோட்டார் அல்லாத மொத்த தவணைப்பணம் (100%) விலைப்பட்டியலிட்டு தவணைப்பண வருமானமாக பதிவு செய்யப்படுகிறது.இருப்பினும், முதன்மை காப்புறுதியாளரின் சந்தைப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவை ஈடுகட்ட NITF ஆல் 20% தரகு செலுத்தப்பட வேண்டும்.கடன் குறிப்புக்கள் பொது கம்பனிகளிடமிருந்து 20% | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத பாதுகாப்புக்கான மோட்டார் அல்லாத கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணைப்பணத்திற்கு தரகு செலுத்துவதற்கான சட்டப்பூர்வ தன்மையை கம்பனி மதிப்பீடு செய்து |

| | | |
|---|---|---|
| வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் செலவு வைக்கப்படும். எவ்வாறாயினும்,முறையான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் காப்புறுதி கம்பனிகளுக்கு நிதியமானது 20% தரகினை செலுத்தியுள்ளது. மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான மோட்டார் அல்லாத காப்புறுதிக் கொள்கைகளுக்கு தரகாகரூபா.1,087,484,898 தொகையானதுசெலுத்தப்பட்டது. | தரகுக்காக பெறப்பட்டு,NITF ஆல் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.அதற்கு பதிலாக NITF, தீர்ப்பனவில் உள்ள விலைப்பட்டியலில் இருந்து செலுத்த வேண்டிய கடன் குறிப்பு தரகினைக் கழிக்க அனுமதிக்கிறது. | தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (b.) 25 மார்ச் 2008 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி எண் 1542/11 இன் பந்தி 3(1) இன் படி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாதத்திற்கான காப்புறுதிக் கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணையானது அரச வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் செலவு வைக்கப்படும். எவ்வாறாயினும், வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத பாதுகாப்பிற்காக காப்புறுதி கம்பனிகளால் வசூலிக்கப்பட்ட மொத்த தவணையில் 12% மட்டுமே மோட்டார் காப்புறுதிக் கொள்கைகளில் இருந்து சரியான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் நிதியம் வசூலித்துள்ளது. எனவே, மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டிற்கான நிதியத்திற்கான | NITF ஆல் SRCC & Fund இன் தொடக்கத்திலிருந்தே மோட்டார் வகுப்பிற்காக செயல்படுத்தப்பட்ட மோட்டார் XOL ஏற்பாட்டின் படி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது,அதன்படி அவ்வப்போது மோட்டார் வகுப்பு அதிகப்படியான இழப்பு ஏற்பாட்டின் (XOL) கீழ் வசூலிக்கப்படும் தவணைப்பணத்தின் சதவீதம் தீர்மானிக்கப்பட்டது, இதனால் சபைத் தீர்மான எண். 53-16 தவணைப்பணமாக பெறப்பட்ட பணம் காப்புறுதிக் கம்பனிகளால் சேகரிக்கப்பட்ட மொத்த தவணைப்பணத்தில் 12% ஆகும். இருப்பினும், 12% ஐ முடிவு செய்வதற்கு முன், அதே ஆண்டில் மொத்த தவணைப்பணத்தில் 15% கோரப்பட்டது, அந்த முடிவை தொழில்துறையினர் எதிர்த்ததால் அது இறுதியாக 12% ஆகக் குறைக்கப்பட்டது.<br><br>2021 இல் NITF இன் முகாமைத்துவமானது XOL ஏற்பாட்டின் தற்போதைய நடைமுறையை இடைநிறுத்துவதற்கான வாய்ப்பைக் குறிப்பிட்டது,மோட்டார் தவணைப்பணத்தை வசூலிப்பதற்கான தற்போதைய நடைமுறையை மாற்றி, 01.04.2022 முதல் 100% தவணைப்பணத்துடன் மோட்டார் காப்புறுதி வகுப்பில் சபை பத்திர எண். 172-03 இன் படி 100% பொறுப்பை ஏற்க முடிவு | வேலைநிறுத்தம், கலவரம், சிவில் கலவரம் மற்றும் பயங்கரவாத பாதுகாப்புக்கான மோட்டார் கொள்கைகளை வழங்குவதன் மூலம் வசூலிக்கப்படும் தவணைப்பணத்திற்கு தரகு செலுத்துவதற்கான சட்டப்பூர்வ தன்மையை கம்பனி மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவணையின் குறைப்பு ரூபா.9,596,748,087 ஆகும். | செய்யப்பட்டது. இந்த முடிவை செயல்படுத்துவதில்தொழில் துறையினர் எதிர்ப்பு தெரிவித்ததால், அமுலாக்கம் ஒத்திவைக்கப்பட்டது.சபை முடிவின் படி,மோட்டார் காப்புறுதிக் கொள்கைகளில் 100% தவணை 01/01/2023 முதல் நடைமுறைப்படுத்தப்படும். | |
| (c.) | 2007 இன் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டம் மற்றும் 21 டிசம்பர் 2012 திகதியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி அறிவித்தல் எண் 1791/4 இன் படி, இலங்கையின் பொது (ஆயுள் அல்லாத) மீள் காப்புறுதியில் 30% கட்டாயக் கூறாக நிதியம் வைத்துள்ளது. எவ்வாறாயினும், கட்டாயக் கூறை மீள் காப்புறுதி செய்யும் காப்புறுதியாளர்களுக்கு நிதியம் ஒரு தரகினை வழங்கியது அவதானிக்கப்பட்டது. நிதியமானது 13 பொதுக் காப்புறுதி கம்பனிகளுக்கு 2017 முதல் 2021 வரையிலான ஆண்டுகளுக்காக மேற்கூறிய கட்டாயக் கூறுக்காக மீள் காப்புறுதி தரகாக ரூபா.7,390,263,635 தொகையினை உரிய சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் செலுத்தியிருந்தது. | மீள்காப்புறுதி வணிகத்தின் தன்மை மற்றும் நடைமுறையின் படி, இலங்கையில் உள்ள முதன்மைக் காப்புறுதி கம்பனிகள் வெளிநாட்டு மீள்காப்புறுதியாளர்களின் குழுவுடன் தமது மீள்காப்புறுதி காப்பீட்டு ஏற்பாடு செய்துகொள்கின்றன மற்றும் NITF ஆனது கட்டாயமான 30% கூறின் கீழ் குழுவிற்கு ஒரே ஒரு மீள்காப்புறுதியாளராக மாற வேண்டும்.இருப்பினும், மீள்காப்புறுதி உடன்படிக்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தலைமை மீள்காப்புறுதியாளரால் எழுத்துறுதியாக அறிவிக்கப்படுகின்றன.மீள்காப்புறுதி விதிமுறைகளின் படி, குழுவில் உள்ள மற்ற அனைத்து மீள்காப்புறுதியாளர்களும் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றுகின்றனர்.NITF பொதுவாக ஒரு பின்தொடர்பவராக விகிதாசார ஒப்பந்த உடன்படிக்கையில் பங்கேற்கிறது.NITF இன் மீள்காப்புறுதியின் எழுத்துறுதியின் தொடக்கத்தில் இருந்து, இது தொடரும் வழக்கம் பின்பற்றப்பட்டது. தரகின் சதவீதத்தை உண்மையில் தலைவர் ஒப்புக்கொண்டார் என்பதை NITF ஏற்க வேண்டும். | கட்டாயமான 30 சதவீத மீள்காப்புறுதித் தொகைக்கு தரகு செலுத்துவதற்கான சட்டப்பூர்வத்தன்மை மற்றும் நியாயத்தன்மையை நிறுவனம் மதிப்பீடு செய்து, அதற்கேற்ப உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |